முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.9/2021**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.01.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 08.01.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | பழனிசாமி | வயது.. | 55 |
| தந்தை பெயர். | பொன்னுசாமி | கிராமம்.. | கீழ்புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

1. என் சொந்த ஊர் என்ன என்றால் திருப்பூர். தற்போது வசிக்கும் விலாசத்தி்லி எத்தனை வருடங்களாக இருக்கிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக. OS.11/2021 என் ற வழக்கின் வாதியான சிதம்பரத்தை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது வீட்டு மாடியில் குடியிருப்பவர். சிதம்பரம் எத்தமைவருடங்களாக எனது வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சுமார் 15 -20 வருடம். தற்போது குடியிருக்கும் வீடு எப்போது வாங்கினேன் என்றால் சுமார் 20 -25 வரு்ங்களுக்கு முன்பு. நான் திருப்பூரில் இருநது புவனகிரிக்கு வரும்போது சுமார் 1 வருடம் வாடகை வீட்டில் வசித்து வந்தேன் அதன் பின் தான் வீடு வாங்கினேன்.

2. சிதம்பரம் என்பவர் தற்போது வரை குடும்பத்துடன் எனது வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சிதம்பரத்திற்கும் எனக்கும் என்ன உறவு முறை என்றால் பழகிய உறவு தான் வேறு எந்த உறவும் கிடையாது. பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு தெரிந்த ஒரு டிரைவர் மூலம் என்னிடம் வாங்கினார். அந்த டிரைவர் பெயர் கபிரேல், அவர் பண்ருட்டி என்றுஅவர் ஊரை சொன்னார். கபிரேல் என்னிடம் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்ததன் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. கபிரேல் என்பவரை இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. கபிரேல் யை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் இல்லை. கபிரேலுக்கும் எனக்கும் பழக்கவழக்கங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் அவரை இந்த

வழக்கில் சாட்சியாக விசாரிக்க இயலாது என்றால் சரியல்ல. கபிரேல் பிரதிவாதியை எனக்கு பிரதிவாதியை அறிமுகப்படுத்தவில்லை என்றாலும் பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. பணம் கொடுத்த பிறகு பிரதிவாதியை நான் சந்தித்துள்ளேனா என்றால் இல்லை. அதன் பிறகு பிரதிவாதியை வேறு எந்த விதத்திலும் தொடர்பு கொல்லவில்லை என்றால் பணம் கொடுத்து சில மாதங்கள் பிறகு அவர் வட்டி செலுத்தி வந்தார் அதன் பிறகு தொடர்பு கொள்ளவில்லை அதனால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. எந்த தேதியில் பிரதிவாதி கடன் வாங்கினார் என்றால் 25.01.2018. எந்த தேதி வரை, எத்தனை மாதங்கள் வரை பிரதிவாதி வட்டி கொடுத்தார் என்றால் சுமார் 15 மாதங்கள் வட்டி கொடுத்தார். எனக்கு என்ன தொழில் என்றால விவசாயம். நேரடியாக விவசாயம் செய்கிறீர்களா என்றால் என்னுடைய சொந்த நிலத்தில் ஆட்களை வைத்து விவசாயம் செய்கிறேன். எத்தனை வருடங்களாக வட்டி தொழில் செய்கிறேன் என்றால் சுமார் 15 வருடங்களாக யாரேனும் பணம் கேட்டால் கொடுப்பேன். வட்டி தொழில் செய்வதற்கு உரிய உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். எந்த வருடம் உரிமம் வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. உரிமம் எண். என்ன என்றால் ஞாபகம் இல்லை. நான் வைத்துள்ள உரிமம் நடைமுறையில் உள்ளதா என்றால் உள்ளது.

5. நான் பணம் கொடுக்கல் வாங்கல் விவரத்தினை பதிவேட்டில் குறித்துக்கொள்வேனா என்றால் அப்படி பதிவேடு எதுவும் என்னிடம் இல்லை. ஒவ்வொரு வருடம் உரிமம் புதுப்பிக்கும் போது வரவு செலவு பதிவேட்டை தாக்கல் செய்து தான் புதுக்பிக்கப்படும் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை, எனது ஆடிட்டர் வைத்தியநாதன் தான் அதற்குண்டான நடைமுறையை செய்து வருகிறார். உரிமம் புதுப்பிக்கும் போது வரவு செலவு பதிவேட்டை கொடுத்து தான் புதுப்பிக்க வேண்டும் என்பது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சொல்லி தான் கேள்வி பட்டதாக கூறினேன் என்றால் வரவு செலவு கணக்கு பொறுத்தவரை தனியாக பதிவேடு பராமரித்து வருகிறேன்.

6. என்னுடைய வரவு செலவு கணக்கு பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 15 மாதங்கள் பிரதிவாதி வட்டி கொடுத்துள்ளதாக சொல்லியநிலையல் அதமை என்னுடை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்குரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பூர்த்தி செய்த தேதியில் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை அசலோடு வட்டி பணம் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 15 மாதங்கள் கட்டிய வட்டியை சேர்க்காமல் தான் வழக்குரையில் வட்டி அதிகமாக கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. 15 மாதம் வட்டி போக தான் பிரதிவாதி எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை பூர்த்தி செய்து கொடுத்தார். பிரதிவாதி அசல் தொகை எனக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்றால் ரூ.70,000/-

7. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு பிரதிவாதியிடம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருந்தது அதனை அவர் பைசல் செய்துவிட்டார். பிரதிவாதியிடம் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு கொடுக்கல் வாங்கல் பழக்கம் உள்ளது பற்றி என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்குரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பணம் கொடுத்த பின்பு பிரதிவாதியை நான் பார்த்தேனா என்றால் பணம் கொடுத்து சுமார் 5 மாதத்திற்கு பிறகு தொலைபேசி மூலம் அழைத்து பணம் கேட்டேன், அதன் பிறகு வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

8. தொலைபேசி மூலம் பிரதிவாதியை சுமார் 5 மாதம் கழித்து பணம் கேட்ட நிலையில் அவர் பணம் எதுவும் தரமாட்டேன் என்று சொன்ன நிலையில் சுமார் 2 1/2 வருங்களுக்கு ஏன் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் promissory note காலாவதி ஆவதற்கு முன்பு வழக்கு தாக்கல் செய்துக்கொள்ளலாம் என்று இருந்தேன். பொதுவாக யாரிடம் பணம் கொடுத்தாலும் அவர்கள் பணம் தர முடியாது என்று பணம் வாங்கிய 2 மாதத்தில் சொன்னாலும் promissory note காலாவதி ஆகும் வரை காத்திருப்பேன் என்றால் சரிதான்.

9. பிரதிவாதி வீடு எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வேலை செய்யும் அலுவலகம் தெரியுமா என்றால் அவர் வாய்மொழியாக வேலை செய்யும் இ,டத்தை பற்றி சொல்லியுள்ளார், அது பற்றி நேரடியாக தெரியாது. பிரதிவாதி எந்த வித மான பணம் வாங்கவில்லை என்ற காரணத்தினால் தான் நான் தொலைபேசி மூலம் அழைத்தபோது பணம் தரமாட்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்து வருகிறார் எனறால் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துக் கொண்டேனா என்றால் பிரதிவாதி வழக்கறிஞர் வைத்து கட்சி செய்கிறார் என்ற விவரத்தை மட்டும் தான் எனது வழக்கறிஞர் கூறினார்.

10. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு பூர்த்தி செய்யப்பட்டது என்றால் எனது வீட்டில், எந்த நேரம் என்றால் சுமார் மாலை 6 மணியளவில். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகள் யார் என்றால் பழனிசாமி மற்றும் வேலு. பழனிசாமி மற்றும் வேலு யார் என்றால் பழனிசாமி என்னிடம் டிராக்டர் டிரைவராக உள்ளார். வேலு என்பவர் என்னுடைய நிலத்தில் விவசாய வேலை செய்து வருகிறார். எனக்கு சொத்தமான நிலம் எங்கு உள்ளது என்றால் சித்தேரி கிராமம். வா.சா.ஆ.1 ஆவணத்தை பூர்த்தி செய்த மாதவன் யார் என்றால் எனக்கு

பழக்கமானவர். மாதவன் வீடு எங்கு உள்ளது என்றால் என் வீட்டு பக்கத்தில். மாதவன் என்ன படித்துள்ளார் என்றால் ஆடிட்டிங் படித்துள்ளார். நான் வட்டிக்கு பணம் கொடுக்க ஆரமித்ததில் இருந்த எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் 30 வழக்குகள். எத்தனை வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. பைனான்ஸ் நிறுவனம் சம்மந்தமாக போர்ட் வைத்து தொழில் செய்கிறேனா என்றால் இல்லை.

11. பணம் வாங்குபவர் கள் எப்படி என்னை அனுகிகிறார்கள் என்றால் அவர்களுடைய பணம் தேவைக்காக. நான் மீட்டர் வட்டி 10,20,மீட்டர் வட்டி வாங்குவதனால் தான் போர்ட் வைக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடைய கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்திற்காக 15 மாதங்கள் வட்டி கொடுத்ததாக நான் கூறுவது பொய்ய என்றால் சரியல்ல. அந்த காரணத்தினால் தான் 15 மாதம் வட்டி சம்மந்தமாக வழக்கறிஞர் அறிப்பிலோ வழக்குரையிலோ அதை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையில் பணம் வாங்கியிருந்தால், அதற்குண்டான 15 மாதங்கள் பணம் செலுத்தியிருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின் பக்கத்தில் குறிப்பு இருந்திருக்கும் என்றால் சரியல்ல.

12. OS.11/2021 வழக்கு தாக்கல் செய்த சிதம்பர்ம் என்பவர் உண்மையில் என்னுடைய உறவினர் என்றாலும் அவருடைய தங்கையை தான் திருமணம் செய்துள்ளேன் என்றாலும் இல்லை. நானும் சிதம்பரமும் கூட்டு சேர்ந்துக்கொண்டு பொய்யான வழக்குகளை தாக்கல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணமும், OS.11/2021 வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணமும் ஒரே நபரால் பொய்யா பூர்த்தி செய்யப்பட்டு, இதில் கண்டுள்ள இதே 2 சாட்சிகளால் கையெழுத்திடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. OS.11/2021 வழக்கின் வாதி என்மூலமாக இந்த பொய் வழக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

13. பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும், எந்த promissory note ம் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது

பிரதிவாதி கையெழுத்து இல்லை என்பதால் அவர் அசல் வட்டி சேர்த்து எந்த ஒரு பணமும் கொடுக்க பிரதிவாதி கடமை பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையுடம் தள்ளுபடி செய்ய தக்க வழக்கு என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை** :

**-இல்லை-**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.